**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 105 /2023**

**Deposition of P.W.2**

Name : டாக்டர். திரு. ஷாகுல் ஹமீது

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:13.08.2025**

**Accused absent**. Petition filed and allowed.

முதல் விசாரணை–

நான் பத்மனாபபுரம்அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி பணி நிறைவு பெற்று விட்டேன். இதற்கு முன்னர் பத்மனாபபுரம் அரசு மருத்துவமனையில் பணியாற்றிய போது 14.09.2001ம் தேதி இரவு 09.50 மணிக்கு 40 வயதுடைய செல்வராஜ் என்பவரை தக்கலை உதவி ஆய்வாளரின் மருத்துவ நமூனாவின் படி பரிசோதனை செய்தேன். அவர் என்னிடம் அன்று மாலை 06.00 மணியளவில் வெள்ளியோடு சந்திப்பில் வைத்து தெரிந்த 3 நபர்கள் கை கொண்டு தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்து பார்த்த போது அவருக்கு கீழ் கண்ட காயங்கள் இருந்தன.

1) அடி வயற்றில் வலி இருப்பதாக கூறினார்.

பரிசோதனையில் வீக்கமோ, வலியோ இல்லை.

2) இடது பக்க முதுகில் வலி இருப்பதாக கூறினார். பரிசோதனையில் வீக்கம் இல்லை. அழுத்தும் போது வலி இருந்தது.

3) வலது புறங்கையில் 3/4 cm x 1/8 cm x தோல் ஆழமுள்ள உரசல் காயம்

4) கழுத்து வலிப்பதாக கூறினார்.

அவருக்கு வெளிநோயாளியாக சிகிச்சை வழங்கினேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.2. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1, 2, மற்றும் 4வது காயங்கள் பாவனையாக கூட இருக்கலாம். 3வது காயம் மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே விழும் போது காயம் கூட ஏற்பட வாய்ப்பு உண்டு.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 105 /2023**

**Deposition of P.W.3**

| | |
|---|---|
| Name | : வாசப்பன் |
| S/o, D/o, W/o | : பொன்னையா |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:13.08.2025**

**Accused** absent. Peititon filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது குலசேகரம், நாககோட்டில் வசித்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். TN 74 A 4645 என்ற இருசக்கர வாகனம் எனக்கு சொந்தமாக இருந்தது. கண்ணனுரை சேர்ந்த போலீஸ்காரர் செல்வராஜ் என்பவருக்கு விலைக்கு கொடுப்பதற்காக எடுத்து சென்றார். ஒரு வார காலமாக அவர் அதனை ஓட்டி வந்தார். 2001ம் வருடம் 9வது மாதம் வெள்ளிகோடு அருகே வேலைக்கு சென்று கொண்டிருந்த போது அடி, தடி ஆகிவிட்டது. போலீசார் என்னிடம் அன்றைய தினம் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் சொன்னது போல் எனக்கு எவ்வித வாகனமும் கிடையாது என்றும், நான் அ.சா.1–ற்கு வாகனத்தை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த சம்பவத்தையும் கேள்வி படாமல். பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.